# கோவை, மதுரை, தூத்துக்குடியில் ரூ. 1,478 கோடிக்கு உள்கட்டமைப்புப் பணிகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுமதி

**சென்னை, ஜூலை 21:** தமிழ்நாடு நகர்ப்புற முதலீட்டுத் திட்டத்தின் கீழ், கோவை, மதுரை, தூத்துக்குடியில் ரூ.1,478 கோடியில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதற்கான அனுமதியை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கியுள்ளார்.

இது குறித்து தமிழக அரசு சார்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தொழில் பெருவழித்தடங்களில், முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் வழங்குதல், கழிவுநீர் மற்றும் வடிகால் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், புதுமையான திட்டங்களை ஊக்குவித்தல், சுற்றுச்சூழல்நிலைத்தன்மை ஆகிய நோக்கங்களை தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டுத் திட்டம் கொண்டிருக்கிறது.

இது ஆசிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் 3 கட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டாம் கட்டத்தைத் தொடர்ந்து, இப்போது மூன்றாம்கட்டமாகதிட்டத்தைச் செயல்படுத்த நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு அரசு ரூ.328.06 கோடியை பங்களிப்பு நிதியாகவும்,



ஆசிய மேம்பாட்டு வங்கியானது ரூ.1,478.34 கோடியையும் வழங்கவுள்ளது.

**எங்கெங்கு திட்டங்கள்?** தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டுத் திட்டத்தின் மூன்றாம்கட்டமாக, கோவை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட வடவள்ளி, வீரகேரளம், கவுண்டம்பாளையம், துடியலூர் ஆகிய பகுதிகளில் ரூ.922.16 கோடியில் புதை சாக்கடைத் திட்டமும், தூத்துக்குடி மாநகராட்சியில் ரூ.87.01 கோடியில் மழைநீர் வடிகால் திட்டப் பணிகளும், மதுரை மாநகராட்சியில் ரூ.370.61 கோடியில் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகளும் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டப் பணிகளை சிறப்பாக மேற்கொள்வது தொடர்பாகவும், உரிய வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்கவும் நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் டி.கார்த்திகேயன் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக முதலீட்டாளர் மாநாட்டு சிறப்பு அதிகாரி அருண்ராய்

## தமிழக அரசு உத்தரவு

**சென்னை, ஜூலை 21:** உலக முதலீட்டாளர் மாநாட்டின் சிறப்பு அதிகாரியாக வி.அருண் ராய் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா பிறப்பித்துள்ளார்.

இது குறித்து அவர் வெள்ளிக்கிழமை பிறப்பித்த உத்தரவு: (அதிகாரிகள் முன்பு வகித்த பதவி அடைப்புக் குறிக்குள்)

1. **தேவ் ராஜ் தேவ்** - அறிவியல் நகரத்தின் துணைத் தலைவர் (ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர், கோவை)

2. **பி.ஆகாஷ்** - தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் (தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை இணைச் செயலர்)



வி.அருண்ராய்

3. **நிஷாந்த் கிருஷ்ணா** - தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் (தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர்)

4. **வி.அருண் ராய்** - குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் துறை செயலர், உலக முதலீட்டாளர் மாநாட்டின் சிறப்பு அதிகாரி பொறுப்பை கூடுதலாகக் கவனிப்பார் என்று தனது உத்தரவில் தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா தெரிவித்துள்ளார்.

**மீண்டும் அதே பதவி:** கடந்த 2018-ஆம் ஆண்டு அதிமுக ஆட்சிக் காலத்தில் இரண்டாவது முறையாக உலக முதலீட்டாளர் மாநாடு நடத்தப்பட்டது. இந்த மாநாட்டின் சிறப்பு அதிகாரியாக வி.அருண் ராய் செயல்பட்டார்.

# பெண்களை மதிப்பதே நாகரிகம்

**முனைவர் என். பத்ரி**

தற்காலங்களில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள். இருப்பினும், சமூகத்தில் அவர்கள் தொடர்ந்து வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு வருவது சமூக ஆர்வலர்களுக்கு பெருத்த கவலையை அளிக்கிறது.

75-ஆவது சுதந்திர தினவிழாவில் பேசிய இந்தியப் பிரதமர் மோடி, தினசரி வாழ்க்கையில் பெண்களை அவமதிக்கும் அனைத்துச் செயல்களையும் மக்கள் விட்டுவிட உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

மணிப்பூர் மாநிலத்தில், தலைநகர் இம்பாலிலிருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில் இளம்பெண்கள் இருவரை ஒரு கும்பல் நிர்வாணமாக்கி நடுரோட்டில் ஊர்வலமாக இழுத்துச் செல்வது போன்ற காணொலி சமூக வலைதளங்களில் சமீபத்தில் வெளியாகி நமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து தீவிர விசாரணை நடத்துமாறு காவல் துறைக்கு அந்த மாநில முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இது போன்ற நிகழ்வுகள் நம் அனைவருக்கும் பெருத்த கவலையை ஏற்படுத்துகின்றன. அகில உலக அளவில் இதுபோன்ற நிகழ்வுகள் நமது பொருளாதாரத்திலும், நன்மதிப்பிலும் பெரிய எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும்.

கடந்த ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி முதல் டிசம்பர் 31-ஆம் தேதி வரை இந்திய காவல் துறை பதிவு செய்த 60 லட்சம் குற்றங்களில் 4,28,278 வழக்குகள் பெண்களுக்கு எதிரான குற்றங்களுடன் தொடர்புடையவை. கடந்த ஆறு ஆண்டுகளில் இது 26.35% அதிகமாகியுள்ளது.

2021-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள பெரும்பாலான வழக்குகள் பெண்கள் கடத்தல், வீட்டு வன்முறை, வரதட்சணை மரணங்கள் சார்ந்தவை எனத் தெரிகிறது.

மேலும், 107 பெண்கள் அமில வீச்சுக்கும், 1,580 பெண்கள் கடத்தலுக்கும், 15 சிறுமிகள் விற்பனைக்கும் உள்ளாகி இருக்கின்றனர். இணையவழி குற்றங்களால் 2,668 பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலமான உத்தர பிரதேசம் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் முதலிடத்தையும், அதனைத் தொடர்ந்து ராஜஸ்தானும், மகாராஷ்டிரமும் உள்ளன.

சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி 76,263 பெண்கள் கடத்தப்பட்டிருக்கின்றனர். இது 2016-ஆம் ஆண்டின் புள்ளிவிவரமான 66,544-ஐ விட 14% அதிகமாகும்.

2021-ஆம் ஆண்டு காவல்துறையினர் 1,37,956 பெண்களிடம் இருந்து புகார்களைப் பெற்றுள்ளனர். நான்கு நிமிஷங்களுக்கு ஒருமுறை அவர்களுக்கு எதிரான ஒரு குற்றம் பதிவாகிறது.

2016-ஆம் ஆண்டில் 1,10,434 பெண்கள் காவல்துறையினரின் உதவியை நாடியுள்ளனர். 2021-இல், இது 27% அதிகமாகியுள்ளது. பெண்கள் மீதான ஆண்களின் பார்வைக்கு அவர்களின் இளமைக்கால வளர்ப்பு முறையே அடிப்படைக் காரணமாகும்.

பலர் பாலியல் தொழிலுக்காகவும், வீட்டுப் பணிகளுக்காகவும் கடத்தப்படுகின்றனர். கடத்தப்பட்ட 28,222 பெண்களில் பெரும்பாலானோர் கட்டாயத் திருமணத்திற்காக கடத்தப்பட்டதாக தெரியவருகிறது. கணவர் அல்லது அவரது உறவினரால் கொடுமை குற்றங்கள் வழக்குகளும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. ஆனால், இந்தியாவில் பெண்களுக்கு எதிராக வீடுகளில் நடக்கும் வன்முறையில் பேரமைதி நிலவுவது துரதிருஷ்டவசமானது.

1961-இல் வரதட்சிணை சட்டவிரோத சட்டத்தையும், 1983-இல் வரதட்சிணைக் கொடுமைக்கு எதிரான 498ஏ என்ற சட்டப்பிரிவையும் இந்திய அரசு அமல்படுத்தியது. எனினும், மணமகள் குடும்பத்தினரிடம் வரதட்சிணை கேட்பது தொடர்கிறது.

அண்மைக்கால உலக வங்கியின் புள்ளிவிவரப்படி, இந்திய கிராமப்புறங்களில் நடைபெறும் 95% திருமணங்களில் வரதட்சிணை தரப்படுவதாக தெரியவருகிறது. கடந்த ஆண்டு காவல்துறையின் பதிவின்படி சராசரியாக 77 நிமிஷத்துக்கு ஒரு வரதட்சிணை மரணம் நிகழ்கிறது.

பெண்கள் தமக்கான சட்டங்களைப் பயன்படுத்த வேண்டுமானால், முதலில் அவர்கள் தங்களின் உண்மை நிலையை உணர வேண்டும். ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் பாகுபாடு பற்றிய சட்டங்கள் மாற வேண்டும். அரசியல், சமூக போராட்டங்களில் பெண்கள் பங்கேற்பது அதிகமாக இருக்க வேண்டும்.

பெண் மக்களாட்சி பிரதிநிதிகள் அனைத்து நிலைகளிலும் ஆண்களுக்குச் சமமாக இருக்க வேண்டும். பெண்களின் அரசியல் பங்களிப்பில் அவர்களின் நலன் மட்டுமின்றி சமூக நலனும் அடங்கியிருக்கிறது. இன்றைய தினம் பெண்கள் ஓரளவுக்குப் பாதுகாப்பாகவும், உரிமை உடையவர்களாகவும் இருப்பதற்குக் காரணம், பல பெண்களின் போராட்டங்களின் விளைவே ஆகும்.

கல்வி, வேலைவாய்ப்பு, தனித்திறன் வளர்ப்பு என ஒவ்வொரு துறையிலும் பெண்கள் தமக்கென ஒரு கருத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பெண்கள் அடிப்படையில் உழைப்பாளிகள். ஆனால், அவர்களின் உழைப்பு முறையாக அங்கீகரிக்கப்படுவதில்லை. வெளியில் வேலை செய்யும் பெண்களுக்கு கிடைக்கும் அதே மரியாதை, வீட்டைப் பார்த்துக்கொள்ளும் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும்.

சமூகநலத் துறையின் மூலம் பெண்கள், குழந்தைகள், நலிவுற்றோர், ஏழைகள், மூத்த குடிமக்கள், திருநங்கைகள் போன்றோரின் நல்வாழ்வை பல்வேறு சமூகநலத் திட்டங்கள் மூலம் தமிழக அரசு உறுதி செய்து வருவது பாராட்டுக்குரியது. பெண்களுக்கு இவற்றைப் பற்றிய விழிப்புணர்வு பள்ளிகளிலேயே அளிக்கப்பட வேண்டும். ஆணாதிக்க சமுதாயத்தில் அவர்கள் துணிந்து செயல்பட அஞ்சுகிறார்கள் என்பதே உண்மை.

பெண்கள் தனியாகப் பயணிக்கும் போது, தங்கள் பாதுகாப்புக்காக காவலன் செயலியை பயன்படுத்தவும், பயணவழித் தொடர்பை பெரியவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதும் நல்லது.

ஆபத்தை உணரும்போது 1091 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணைப் பயன்படுத்தி தேவையான உதவியைப் பெற வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறைகளை அடியோடு ஒழிப்பது நம் அனைவரின் கூட்டுப் பொறுப்பு என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டிய நேரமிது.

EVA STALIN IAS

# தென்னகத்தின் தீப்பிழம்பு சிவா!



எஸ். காசி விஸ்வநாதன்

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய விடுதலைப் போராட்டத்தின் தொடக்க கர்த்தாக்களாக தென்னகத்தில் மூன்று தலைவர்களைக் குறிப்பிடலாம். 1900-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் உச்சத்தை எட்டிய சுதந்திரப் போராட்டத்தில், வ. உ. சிதம்பரனார், மகாகவி பாரதி, சுப்பிரமணிய சிவா ஆகியோர் சென்னை மாகாணத்தில் திலகரின் தளபதிகளாகத் திகழ்ந்தனர். இவர்களே தென்னாட்டு தேசியத்தின் பிதாமகர்கள்.

சுப்பிரமணிய சிவா தியாகத்தின் வடிவம், எழுச்சியூட்டும் படைப்பாளி, பத்திரிகை ஆசிரியர், வ.உ.சி.-க்கு போராட்டக் களத்தில் தோள் கொடுத்த தோழர், இலக்கியவாதி, இதழியலாளர், மேடைப்பேச்சாளர், மொழிபெயர்ப்பாளர், தொழிற்சங்கப் போராளி எனப் பன்முகத்தன்மை கொண்டவர். சிவாவின் நாவும் எழுத்தும் மக்களை விடுதலை வேள்விக்கு ஈர்த்திழுத்தன.

கம்பீரத் தோற்றம், சிவந்த நிறம், விரிந்த நெற்றி, நெற்றியில் மணம் கமழும் நீறு, மத்தியில் வட்டமான பொட்டு, மூக்குக்கு கீழ் அடர்ந்த மீசை, அதனை தொட்டு நிற்கும் கருகரு என்றிருக்கும் அடர்ந்த தாடி, எதற்கும் அஞ்சாத நெஞ்சம், கையிலே நீண்ட தடி, ராஜ கம்பீரத் தலைப் பாகை. இது தான் சிவாவின் தோற்றம்.

'எனது மதம் பாரதிய மதம், எனது ஜாதி பாரத ஜாதி, எனது தாய் பாரத மாதா, எனது தொழில் ஞானப்பிரசாரம், நாட்டுக் குழைத்தல், பரிபூரண சுதந்திரமே எனது லட்சியம்' எனப் பிரகடனப்படுத்திக் கொண்டவர் சுப்பிரமணிய சிவா.

வத்தலகுண்டில் 1884-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ஆம் தேதி ராஜம் அய்யர்- நாகம்மை தம்பதிக்குப் பிறந்தார். அவருக்கு சுப்புராமன், முனீஸ்வரன், முனிரத்தினம் என்று பெயர் சூட்டப்பட்டது. சுவாமி சதானந்தரிடம் யோகமும் ஞானமும் பயின்றவர். பழனிமலைக் குகையில் சிவ தியானம் செய்தபோது அனுபவம் பெற்றதில் இருந்து மௌனகுரு ஆனார். பழங்காடி பயில்வான் என்று பெயர் எடுத்து உடலை வலிமை செய்தவர். இவர் மாமாவும் ஞான குருவுமான ஆறுமுகம் இவரை சிவம் என்றே அழைத்தார். அதுவே சுப்பிரமணிய சிவம் என்று நிலைத்து விட்டது.

1906-இல் ஆரிய சமாஜ் தொண்டர் தாகூர்கான் சந்திரவர்மாவின் பேச்சைக் கேட்டார். அரசியல் விழிப்புணர்வு பெற்றார். திருவிதாங்கூர் சமஸ்தானம் நாட்டை விட்டு வெளியேற்றியது. தேச விடுதலைக்கு கட்டிய ஆடையுடன் கிராமம் கிராமமாக நாட்டின் நிலைமையைக் கூறி சுதேசிய பிரசாரம் செய்து கொண்டே புறப்பட்டார். எதைப் பற்றியும் கவலைப் படாத சிவா, கிராமம் கிராமமாக பிரசாரத்தை மேற்கொண்டு நடைப்பயணமாக திருநெல்வேலி மாவட்டத்தை வந்தடைந்தார். கடையநல்லூரில் சிவாவின் வீர உரைகளைக் கேட்ட சுதேசிய பண்டகசாலை அதிபர் சங்கரநாராயண ஐயர் இவருக்கு உதவினார்.

விடுதலைப் போர் நெல்லையிலும் தூத்துக்குடியிலும் கனல் விடத் தொடங்கிய நேரத்தில் வ. உ. சிதம்பரனாருடன் இணைந்து போராட்டகளத்தில் ஈடுபட்டார். 1908-ஆம் ஆண்டு பிப்ரவரி மூன்றாம் நாள் வ. உ. சிதம்பரனாரை தூத்துக்குடியில் சுப்பிரமணிய சிவா சந்தித்தார். தேனும் பாலுமாய், மின்னலும் வானுமாய், இடி யோசையும் மழையுமாய் சிதம்பரனாரும் சிவாவும் இணைந்து தூத்துக்குடி மக்களை விழிப்புணரச் செய்தனர்.

1906 அக்டோபர் 16-ஆம் நாள் தூத்துக்குடியில் 'இந்தியன் சுதேசி நாவிகேஷன் கப்பல் கம்பெனியை வ.உ.சி. தொடங்கினார். தென்னகத்திலிருந்து இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு முதல் முழக்கமிட்டு போராடிய வீர பாண்டிய கட்டபொம்மன் 1899-ஆம் ஆண்டு இதே நாளில்தான் தூக்கில் போடப்பட்டார்.



வங்கத்தை லார்ட் கர்சான் 1905-இல் பிரித்தான். தீவிர போராட்டம் வெடித்தது. திலகரின் சொற்பொழிவுகள் விடுதலை உணர்வைத் தூண்டின. அவருடைய உரைகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. பாரதியின் இந்தியா பத்திரிகை விடுதலை விதைகளை மக்கள் மத்தியில் விதைத்தது. வ.உ.சி.யும் சிவாவும் தூத்துக்குடியில் அக்கினி குஞ்சுகளை வளர்த்து தீப்பறவைகளாகப் பறக்க விட்டனர்.

**தலைவர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து பவள ஆலைத் தொழிலாளர்கள் 1908-ஆம் ஆண்டு மார்ச் 12 முதல் 19 வரை வேலைநிறுத்தம் செய்தனர். இதுவே இந்தியாவில் நடைபெற்ற முதல் அரசியல் வேலைநிறுத்தம்.**

1905 மற்றும் 1907-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற லெனின் தலைமையிலான ரஷிய புரட்சியின் தாக்கம் இந்தியாவில் எதிரொலித்தது. தேசபக்தியை நவசக்தியாக வர்ணித்து தொழிலாளர் கோரிக்கைகளை சிவா வலியுறுத்தியும் வேலைநிறுத்தம் செய்யும்படியும் தட்டி எழுப்பினார். இதன் விளைவாக திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் மக்கள் கிளர்ந்து எழுந்தனர்.

1908 பிப்ரவரி மாதம் 27-ஆம் தேதி தூத்துக்குடி பவள (கோரல்) ஆலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். வ.உ.சி.யோடு சிவாவும் இணைந்து கொண்ட வேலைநிறுத்தம் வெற்றி பெற்றது. மார்ச் 9-ஆம் நாள் திருநெல்வேலியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இருவரும் எழுச்சி மிகுந்த உரையை நிகழ்த்தினர். அதற்காக கைது செய்யப்பட்டனர். நெல்லையிலும் தூத்துக்குடியிலும் வன்முறை வெடித்தது. நெல்லையில் துப்பாக்கிச்சூடு நடந்தது. நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

யாருடைய தூண்டுதலும் இன்றி, தலைவர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து பவள ஆலைத்தொழிலாளர்கள் 1908-ஆம் ஆண்டு மார்ச் 12 முதல் 19 வரை வேலைநிறுத்தம் செய்தனர். பெற்ற சில்லறைச் சலுகைகளை இழந்ததைப் பற்றி கவலை கொள்ளவில்லை. இதுவே இந்தியாவில் நடைபெற்ற முதல் அரசியல் வேலைநிறுத்தம்.

ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்ற எழுச்சி மிகுந்த போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். பொது மக்களுக்கு பல ஆண்டுகள் தண்டத் தீர்வைகள் ஆங்கிலேய அரசால் விதிக்கப்பட்டன. சிவாவின் மீது ராஜத் துரோக வழக்கு தொடரப்பட்டது.

கலெக்டர் விஞ்ச 'மோசமான கிளர்ச்சிக்காரன்' என சிவாவை வர்ணித்தார். தேசபக்தியை நவசக்தியாக வர்ணித்த சிவா பத்தாண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார். சிதம்பரனாருக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. மேல்முறையீட்டில் தண்டனை குறைக்கப்பட்டது. தண்டனை காலத்தில் சிதம்பரனாரும் சிவாவும் வெவ்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

திருச்சி சிறையில் அடைக்கப்பட்ட சிவா அந்த அனுபவங்களை எழுதியுள்ளார். கம்பளி மயிறு வெட்டுதல், மாவு அரைத்தல், சுண்ணாம்பு நீரில் ஊற போட்ட கம்பளியை உலர்த்துதல் போன்ற வேலைகளைக் கொடுத்து கொடுமைப்படுத்தினர். சிறையில் சிவாவை கொடிய தொழுநோய் பற்றிக் கொண்டு விட்டது. ஆனால், அவரது தேச விடுதலைப் போர் தளரவில்லை.

1912-ஆம் ஆண்டு விடுதலையானார். சிறைக்குச் சென்றபோது திரண்டு வழி அனுப்பி வைத்த ஆயிரக்கணக்கான மக்களில் யாரும் விடுதலையின்போது வரவில்லை. ஆனாலும் வெளியே வந்த சிவா மனம் தளரவில்லை.

1913-ஆம் ஆண்டு 'ஞானபானு' பத்திரிகையைத் தொடங்கினார். சுப்பிரமணிய சிவாவின் பெயரால் பத்திரிகை தொடங்க ஆங்கிலேய அரசு அனுமதி கொடுக்க மறுத்ததால், அவருடைய மனைவி மீனாட்சியின் பெயரில் ஞானபானு தொடங்கப்பட்டது. பதிப்பாசிரியரும் இவரே.

இது சென்னை கோமளீஸ்வரன் பேட்டை கோ. வடிவேல் செட்டியார் அச்சகத்தில் அச்சாகி வெளிவந்தது. 24 பக்கங்கள் கொண்ட இதழ் 350 படிகள் அச்சாகி வெளிவந்ததாகத் தெரிகிறது. நாரதர், குழந்தைவேல், விஸ்வாமித்திரர் எனப் பல்வேறு புனை பெயர்களில் சிவா கட்டுரைகளை எழுதினார். பினாங்கு, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா முதலிய அந்நிய நாடுகளிலும் சந்தாதாரர்கள் இருந்தனர். இரண்டு ஆண்டுகள் முடிவுற்றபோது நமது பின்னோக்கம் என்ற தலைப்பில் சுய விமர்சனமும் தயங்காமல் செய்து கொண்டார்.

'சாவித்திரி', 'நித்தியதீரன்', 'ஓர் உத்தம தேசாபிமானி' போன்ற புனை பெயர்களில் மகாகவி பாரதி, வ.உ.சி., வ.வே.சு. ஐயர் ஆகியோரும் ஞானபானுவில் எழுதினர்.

திலகர் யுகம் முடிந்து காந்தி யுகம் வந்தபோது அதனையும் அங்கீகரித்தார். கள்ளுக்கடை மறியல் போராட்டத்திலும் ஒத்துழையாமை இயக்கத்திலும் பங்கேற்றார். மூன்றாவது முறையாக சிறை சென்றார்.

காந்தியடிகளோடு நேரடியாகத் தொடர்பு கொண்டார். 1921-இல் மதுரைக்கு வந்த காந்தியடிகளைச் சந்திக்க சிவாவின் சீடர் மதுரை சிதம்பர பாரதி அவரை காரைக்குடிக்கு அழைத்துச் சென்றார். கதர் இயக்கத்தை ஏற்ற சிவா, பொதுவுடைமை தத்துவத்தை விரும்பி நேசித்தார். கம்யூனிஸ்ட் அறிக்கை பற்றிய செய்திகள் அடங்கிய பக்கங்களைத் தனியாக எடுத்து பாதுகாத்தார். கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீது ஆர்வம் கொண்டார். இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றுவதற்கு முன்பே 1925 ஜூலை 23-இல் மறைந்து விட்டார். அப்போது அவருக்கு வயது 41 தான்.

சிவா தனது சொற்பொழிவுகளில் கூறுவது- 'இந்தியா ஒன்றே. மனப்பூர்வமாக நினைத்தால் இந்தியா ஒன்றுதான். எல்லா வேற்றுமைகளையும் மறந்து ஒற்றுமையாய் நிர்மிக்கத்துடன் நம்புவோம்'.

**நாளை (ஜூலை 23)**
**சுப்பிரமணிய சிவாவின் நினைவு தினம்.**

கட்டுரையாளர்:
**தலைவர், தமிழ்நாடு ஏஐடியுசி.**

# ஞானவாபி மசூதியில் அறிவியல்பூர்வ ஆய்வு: தொல்லியல் துறைக்கு நீதிமன்றம் அனுமதி

**வாரணாசி, ஜூலை 21:** உத்தர பிரதேச மாநிலம், வாரணாசியில் காசி விஸ்வநாதர் கோயிலுக்கு அருகே அமைந்துள்ள ஞானவாபி மசூதியில் தொல்லியல் துறை அறிவியல்பூர்வ ஆய்வு நடத்த அனுமதி அளித்து மாவட்ட நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.



மசூதியில் மூடி சீலிட்ட சிவலிங்கத்தைப் போன்ற பகுதியைத் தவிர பிற இடங்களில் இந்த ஆய்வை நடத்தி ஆகஸ்ட் 4-ஆம் தேதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் தேவைப்பட்டால் அகழ்வாராய்ச்சியையும் நடத்தலாம் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஞானவாபி மசூதியின் வெளிப்புறச் சுவரில் உள்ள ஹிந்து கடவுள் சிலைகளை வழிபட அனுமதிக்கக் கோரி தில்லியைச் சேர்ந்த 5 பெண்கள் வழக்குத் தொடுத்தனர்.

அப்போது, நீதிமன்ற உத்தரவின்படி மசூதியில் ஆய்வு நடத்திய தொல்லியல் துறையினர் சிவலிங்கம் உள்ளதாக தெரிவித்தனர். ஆனால், அது மசூதியில் உள்ள நீர்த்தேக்க தொட்டியின் நடுவே உள்ள நீரூற்று சிலை என மசூதி நிர்வாகம் தெரிவித்தது. எனினும், அந்தப் பகுதியை மூடி சீல் வைத்துப் பாதுகாக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனிடையே, மசூதியின் முழு பகுதியையும் ஆய்வு நடத்த வேண்டும் என்று ஹிந்து அமைப்பினர் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த மனு மீதான விசாரணையின்போது ஹிந்து தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் விஷ்ணு சங்கர் ஜெயின், 'ஞானவாபி மசூதியின் மூன்று மேற்கூரைகளை ஆய்வு நடத்தினால்தான், ஹிந்து கோயிலை இடித்து முகலாயர் ஆட்சியில் மசூதி கட்டப்பட்டது தெரிய வரும்' என்று வாதிட்டார்.

இதற்கு மசூதி தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், ஹிந்து தரப்பின் மனுவை ஏற்றுக் கொண்ட வாரணாசி மாவட்ட நீதிபதி ஏ.கே. விஸ்வேஷ், ஞானவாபி மசூதியில் சீலிடப்பட்ட பகுதியைத் தவிர பிற இடங்களில் தொல்லியல் துறை அறிவியல்பூர்வ ஆய்வை நடத்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

இந்த உத்தரவுக்கு மசூதியின் நிர்வாகத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த ஆய்வால் மசூதியின் கட்டடத்தில் பாதிப்பு ஏற்படும் என்றும், இந்த உத்தரவுக்கு எதிராக மேல் முறையீடு செய்யப்படும் என்றும் மசூதி தரப்பு வழக்குரைஞர் முகமது தவ்ஹீத் தெரிவித்தார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தாம்பரம், கோவை தெற்கு புதிய பதிவு மாவட்டங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



வணிகவரி, பதிவுத் துறை சார்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் புதிதாக கட்டப்பட்ட அலுவலகக் கட்டடங்களை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி மூலம் வெள்ளிக்கிழமை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், வணிகவரி, பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, வணிக வரிகள் துறை ஆணையர் தீரஜ்குமார், வணிக வரி, பதிவுத் துறை செயலர் பா.ஜோதி நிர்மலாசாமி, பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்.

**சென்னை, ஜூலை 21:** தமிழகத்தில் தாம்பரம், கோவை தெற்கு ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள புதிய பதிவு மாவட்டங்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார். இத்துடன் 13 வணிகவரி மாவட்டங்களையும் காணொலி வழியாக தலைமைச் செயலகத்தில் இருந்து அவர் தொடங்கி வைத்தார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விருதுநகர், குடியாத்தம் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

குடிநீர், கழிப்பறை வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தள நடைபாதை வசதி, இதர வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள இந்தக் கட்டடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

விருதுநகர், குடியாத்தம் போல், தேனி, நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், கன்னியாகுமரி மாவட்டம், பள்ளியாடி ஆகிய இடங்களில் உள்ள சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்தக் கட்டடங்களையும் முதல்வர் திறந்து வைத்தார்.

செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், திருவாரூர், திருப்பூர், விருதுநகர், ஒசூர் ஆகிய இடங்களில் புதிதாக வணிகவரி நிர்வாகக் கோட்டங்களும், வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு செங்கல்பட்டு, திருவள்ளூர், தாம்பரம், ஆவடி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, திருவாரூர், கிருஷ்ணகிரி, சேலம்-2, திருப்பூர்-3, தேனி மற்றும் தென்காசி ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு வணிகவரி மாவட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

**2 புதிய பதிவு மாவட்டங்கள்:** பதிவுத் துறையின் மறுசீரமைப்புப் பணிகளின் அங்கமாக சென்னை மண்டலத்தில் தாம்பரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தாம்பரம் பதிவு மாவட்டமும், கோயம்புத்தூர் மண்டலத்தில் கோவை தெற்கு பதிவு மாவட்டமும் உருவாக்கப்பட்டது. இந்தப் புதிய பதிவு மாவட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வணிகவரி, பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, வணிகவரி ஆணையர் தீரஜ்குமார், வணிகவரி, பதிவுத் துறை செயலர் பா.ஜோதி நிர்மலாசாமி, பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

EVA STALIN IAS ACADEMY

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**